"எப்பொருள்யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

REGISTRAR OF ... REGISTERED 10 JUN 1910 MADRAS.

பூலோக வியாஸன்.

மாதாந்தரப் பிரசுரம்.

தொகுதி 6.] சென்னை, 1909௵ எப்ரல்௴ [பகுதி 4.

ராஸிலஸ்.

65-ஆம்பக்கத்தொடர்ச்சி.

இம்மட்டில் மெய்மறந்திருந்த அவன் அறிவு தெளிந்து விணிலே வேகமாய் ஓடியதை எண்ணி நகைத்தான். பின்புமலைச் சிகரத்தை அண்ணாந்து பார்த்து, "சுகபோகத்தையும் சுகிர்தத்தையும் ஒருங்கு தடுக்கும் படுகண்டா இது தான். என் வாழ்நாளுகளுக்கு எல்லையாக ஏற்பட்ட இந்தமலையின்உச்சியை என் ஆசையும் இச்சையும் தாண்டி எத்தனை நாட்சென்றது. நானோ இம்மலையைக் கடக்க ஒரு நாளும் எத்தனிக்கவில்லையே!" என மொழிந்தான். பின்பு இந்த சிந்தனை நெஞ்சைத் தாக்க, அவன் யோகாப்பியாசம் செய்ய உட்கார்ந்தான். இருஞ்சிறையினின்று விலகும் நிர்ணயம் தன் நெஞ்சிற் பிறந்து கிட்டத்தட்ட ஒரு வருஷமாயிற்றென்று அவன் நினைவுகூர்ந்தான். அப்பொழுது அவன் உள்ளம் என்றும் படாத பாடு பட்டது. வியர்த்தமாய்க் கழிந்த காலத்தில் நன்முயற்சி மெத்தவும் செய்யலாகுமேயென்று அவன் எண்ணினான். மனுஷர் வாழ்நாளுக்கும் இருபது மாசத்திற்கும் அவன் ஒப்பு-உயர்வு-தாழ்வு பார்த்தான். அவன் வாய்ச்சொல் இது:— "பேதமையுள்ள இளம்பருவமும், பலம்ஒடுங்கும் முதிர்பருவமும் மனுஷர் வாழ்நாட் கணக்கிற் சேரா. ஒன்றைச் சிந்தித்து யுக்தம் அயுக்தம் தெரியும் சக்தி வாலிபருக்கு உண்டாக வெகு நாள் செல்லுகின்றது. ஆடவருக்குச் செய்தி

விரைவில்'; ஒழிந்துபோகின்றது. தப்பறப் புதிபூர்வமாய் மதிப்பிட்டால், மனுஷருக்குப் பருவம் ஆக நாற்பது. இதில் இருபத்து நான்கில் ஒரு பாகமாகிய இருபது மாசத்தை அவமே சிந்தனையிற் போக்கினேன். போக்கடித்த காலம் உள்ளது. அது சுவாதீனத்தில் இருந்ததற்கு ஐயம் இல்லையே. இனி வரும் இருபது மாசம் எனக்குச் சுவாதீனப்படுமென உறுதிசொல்லமாட்டுவார் யார்?’’

அவன் மதியீனத்தை அவன் நெஞ்சு அறிய, அவ்வறிவு கூரம்புபோல் அவன் இதயத்தை ஆழ ஊடுருவித் தொளைத்து அவன் நெறிஅவனுக்கே சமாதானப்பட வெகு காலம்சென்றது. என் காலத்தில் மேற்குறித்தது. போக மீந்தது என் மூதாக்கள் தோஷத்தாலும், துர்புத்தியாலும் நியாய விரோதமானதேசாசார மதாசாரங்களாலும் கைகடந்துபோயிற்று. அதைநினைக்க நினைக்க, எனக்கு வெறுப்புத் தட்டுகின்றது. மனோபாதியோ இல்லை என் இருதயத்தில் புதுஒளி உதயமாகியபின் நான்யுத்திபுத்திக்கு ஏற்கச் சுகம் பெறும் உபாயம் சூழ்ந்தபின் சென்ற மாசம் எத்தனை, அத்தனையும் வியர்த்தமாய்க் கழிந்தது என் தோஷமே. மீண்டும் ஒருபொழுதும் அகப்படாத அரும்பொருளைப் போக்கடித்தேன். சென்ற இருபது மாசகாலம் நித்த நித்தம் உதயாதி அஸ்தமனபரியந்தம் வானொளியைச செயலொழிந்து பார்த்த மணியமாயிருந்தேன். இதன் இடையிற் பொரித்த குருவிக்குஞ்சுகள் வளர்ந்து, தாய்க்குருவியின் கூட்டைவிட்டுப்பறந்து, ஜாதித்தன்மைப்படி சில வனத்திலும், சில ஆகாயத்திலும் சஞ்சரிக்கப் போய்விட்டன. வெள்ளாட்டுக்குட்டி தாய் முலைமறந்து நாளாவர்த்தியில் மலைஏறப் பயின்று, யதேச்சையாய்த்திரிந்துதழை குழை மேய்ந்து பிழைக்கின்றது. நான் ஒருவன் மாத்திரம் விர்த்தியடையாமல் இன்றளவும் அகதியாகவும் முட்டாளாகவும் இருக்கிறேன். இருபது முறைக்கு அதிகம் கலை வளர்ந்து தேய்ந்துகொண்டுவந்த சந்திரன் வரவரப் பருவம் ஏறுவதை எனக்குஉணர்த்தியது. என் பாதத்தண்டை அலை புரண்டு ஓடிய நதி என்னைச் சோம்பனென்றுகடிந்துகொண்டது. பூகோள கதியையும் கிரகங்கள் உணர்த்தும் பாடத்தையும் எண்ணாமல் உட்கார்ந்து மனோபவ உண்டியை உண்டு களித்தேன்; இருபது மாசகாலம சென்றது. சென்ற காலத்தைத் திரும்பி வருவிப்பர் யாவர்?’’ என்று அவன் மொழிந்தான்.

துயர் தரும் இச்சிந்தனைகள் அவன் இதயத்தில் அறைந்த ஆணிபோல் அழுந்தியிருந்தன. இனி வியர்த்தமான நிர்ணயம் செய்து வீண்பொழுது போக்காதிருக்கும்படி அவன் மனவுறுதி செய்யப்பின்னும் நாலுமாசம் சென்றது. ஒரு நாள் பீங்கான் ஒன்றைக் கைப்பிழைபாடாய் உடைத்த மனைவி தீராப்பழுதை நினைத்துத் துக்கிக்கலாகாது என்று சொன்னசொல் கேட்டு, தூங்கின அவன் சடிதியில் விழித்துப் பின்னும் அதிக மனவுறுதியோடு முயற்சி செய்ய நிர்ணயித்தான்.

இது திர்ஷ்டி கோசரமாயிருந்தது. இதை முன்னடிக் கண்டறியாதது தன் குற்றமென்று ராஸிலஸ் தன்னையேநொந்துகொண்டான், முன் அறியாமலும், அறிந்து நினைக்காமலும் இருந்த காரியானுகூலமான குறிப்புகள் எத்தனை இருந்தாற்போல ஆகஸ்மீகமாய் மனத்திற்குப் புலப்படும். எத்தனை முறை மனமானது தூரத்திருஷ்டிவிஷயங்களை ஆவலாய்ப் பற்றப் பதைத்து, அதன் எதிரில் கண்கூடாயிருக்கும் மெய்ப்பொருளை உபேக்ஷையாய் விட்டுவிடுகின்றது. ராஸிலஸ் நாலைந்து நாழிகை நேரம் தன் மனசோவை நினைந்து அதற்காக மனம் நொந்தான். அது முதல், இன்பத்திற்கு உறைவிடமாகிய அந்தப் பள்ளத்தாக்கினின்று தப்பும் வகை யாதென்று அவன் மனங்குவிந்து சிந்திக்கத்தொடங்கினான்.

ஒன்றைச் சாதிக்கலாகுமென்று உத்தேசிப்பது எளிது சாதிப்பதோ மிக அரிது என்று பின்னிட்டு அவன் எண்ணத்திற்பட்டது. அவன் நாலண்டையும் சுற்றிப்பார்த்து இயற்கையாய் உருவாகி ஒரு நாளும் பின்னப்படாத தாழ்ப்பாள் இட்டுக் கதவடைத்தமலைமதில் சூழ்ந்த கோட்டைக்குள் தான் சிறையிருப்பதைக் கண்டான். அந்தக்கதவு எவ்வளவு பிரயாசைப்பட்டும் கஷ்டமாய் திறந்து ஒரு முறை உட்செல்வோர்க்கு அப்புறம் மீட்சி இல்லை. அவனுக்கு இப்பொழுது இருப்புக்கிராதிக்கூட்டில் விட்டு அடைத்த கழுகைப்போலப் பதைப்பும் உதைப்பும் உண்டாயின. மலைவழி ஏதும் புதர் மறைவில் இருந்தாலும் இருக்குமென்று அவன் அடுத்து அநேக வாரம் மலை ஏறிப் பார்த்தான். மலையின் உட்பக்கம் கவிந்திருந்ததனால், சிகரத்திற்போய்ச்சேர மாளவில்லை. இருப்புக் கதவுதிறக்கும் ஆசைவீணாசையென்று அவன் உள்ளம்சலித்தது. அக்கதவிற்கு இட்டிருந்த பூட்டு வலியது. முறை மாறித் துவார

பாலகர் நித்தமும் அங்கு இருந்தனர். கதவு இருக்கும் இடம் அங்குள்ள குடிகள் அனைவருக்கும் பகல் இரவு அறுபதுநாழிகையும் தடையறத் தோன்றும்இடம்.

அதன்பின் ஏரிநீர் வடிகாலாகிய கற்புழையை ராவிலஸ் பரீக்ஷித்தான். அந்தப் புழைவாயில் வெயில் தீக்ஷணமாய் எரித்ததினால், அதற்குள் உடைந்து நிறைந்திருந்த கல்லின்திரள் அவன் கண்ணுக்கு மயக்கமறத் தெரிந்தது. அதில் விழும் நீர்தங்காமல் கல்லுக்கும் கல்லுக்கும் இடையில் உள்ள பலசந்துவழிபாய்இறங்கியது. கணத்துக் காத்திரங்கொண்ட வஸ்து எதுவும்விழுந்தால் அது விழுந்த இடத்தில் தங்குவதொழிய இறங்காது. அவன்இந்த மர்மம் அறிந்து மனம் மடிந்துதிடனற்றுத் திரும்பினான். ஆனாலும், ஆசை எனும் வரப்பிரசாதம்இப்பொழுது அவனுக்குத்தெரிந்திருந்ததனால், அகதியானேனென்று இனிஒருநாளும் பரிதபிப்பதில்லையென நிர்ணயித்தான்.

இவ்வித வீண்சோதனைகளிற் பத்து மாம் கழிந்தது. பயன் ஒன்றும் இல்லாதிருந்தும், அந்தக் காலம் அவனுக்கு இதமாகச் சென்றது. காலையில் எழுந்திருக்கும் பொழுது அவன் இதயம் நூதன ஆசை பூரித்திருக்கும். மாலையில் அவன் தன் செய்தொழில் முயற்சியைப் பாராட்டுவான். இராத்திரியில் அலுப்புத்தீர அயர்ந்து நித்திரை செய்வான். உழைப்பின் கஷ்டத்தை மறக்கடித்து மனதை அலுப்புறுவண்ணம் பல துறைகளில் செலுத்திய காலக்ஷேபங்கள் அவனுக்கு மெத்தவும் வாய்த்தன. ஜீவகோடிகளுக்கு இயற்கையான பற்பலகுணங்களையும் மூலவர்க்கத்திற்கு உரிய கூறுகளையும் அவன் நுணித்து உணர்ந்தான். அவ்விடம் எங்கும் அவன் கண்ணுக்கு எதிர்ப்பட்டனவெல்லாம் விந்தைவிந்தையாயிருந்தன. விரும்பியபடி அங்கிருந்து எந்நாளும் மீட்சிபெறஇசையாதிருக்குமானால், அவ்விந்தை விநோதங்களைச் சிந்தித்தாயினும் மனம் தேறலாகுமென்று அவன்நினைந்திருந்தான். செய்த பிரயத்தனங்கள் சிதறியும், ஆய்ந்து ஆய்ந்து தீராத அரியவிஷயம் அப்பிரயத்தனங்களால் வாய்த்ததை நினைந்து மனம் களிகூர்ந்தான்.

ஆதியில் அவனுக்குள்ள அதிசயம் கண்டறியு மபேக்ஷைக்ஷம்யோ தணியவில்லை. உலகநெறி சிறிது அறிந்துகொள்ள அவன் நிர்ணயித்தான். அவனுக்குஆசை அன்றுள்ளபடி இன்றும்உண்டு. ஆசைபட்டது கிட்டுமெனும் மனஉறுதியோ குன்றியது. அவன் சிறைச்சாலை மதிலை ஏறஇறங்கப் பார்த்துக்கொண்டு வருப வழுக்கத்தை அன்றுதொட்டு விட்டுவிட்டான். பின்னும் கஷ்டப்பட்டுச் சந்து பொந்து பார்த்துத் திரிவதும் அவமென்று தள்ளிவிட்டான். சந்து காண்பது அசாத்தியமென அவன்நெஞ்சு அறியுமே ஆனாலும் அஜாக்கிரதையாயிராமல் தன் அபிப்பிராயத்தில் திருஷ்டி வைத்துக்கொண்டிருக்கவும், வரவரத்தோன்றும் எந்த உபாயத்தையும் விடாது பற்றவும் நியதி செய்தான்.

(இன்னும்வரும்)

கமலாவதி.

(முன் தொடர்ச்சி.)

இவ்விதமா யிவர்கள் பேசியவார்த்தைகளை அடுத்த அறையிற் கேட்டிருந்த ஜோதிமதியானவள், ஓகோ இவர்கள் நம்முடைய கற்பென்பதை யழித்து விடுவார்களென ஏற்கனவே தெரிந்தவளாதலால், ஜோதிமதியானவள் சின்னேரம் யோசித்து அவ்விரவில் தனித்து வேறோரிடஞ் செல்லக்கருதி அவ்வரசன் சயனித்திருக்கும் அறைக்குள் சென்று தன்மார்க்க அவ்வரசனுடைய சிகையையும் மீசையையும் கத்தரித்துவிட்டு அங்கு கட்டியிருக்கும் குதிரை யொன்றில்தான் யேறிக்கொண்டு காற்றினும் கடிய வேகமாய்ப் பட்டணத்தைக் கடந்து விரைந்து சென்றாள். இவ்வாறு சென்றஜோதிமதியானவள் அநேக ஆரண்யங்கடந்து மிக்க துன்புற்று வருந்தியவளாய் ஓர் பட்டணமணுகி அவ்வூர் அரசன் வீதிவழியே ஆண்வேடந் தரித்த ஜோதிமதியானவள் சென்றுகொண்டிருந்தாள். நவநாயக மென்பதோர்பதி, அது சூரசேனனென்னும் அரசனால் ஆளப்பட்டு வருகிறது. காலை பதினோரு மணிக்கு அவ்வூருக்குட்சென்ற ஜோதிமதியானவள் அங்கு கட்டப்பட்ட உன்னதமான அரண்மனையையும்கடைவீதிகளையும் இன்

னுபநேக ஆச்சரியகாக்ஷிகளையும் பார்த்துக் கொண்டு வருகையில் அக்கடை வீதியிலுள்ள பெண்களெல்லாம் ஜோதிமதியைக் கண்ணுற்று இவன் தேவபுருஷனோ வெனத்தியங்கி மயங்கி நின்றவிடத்தில் அசைவர நின்றனர். புருஷர்கள் இமைகொட்டாமற் பார்த்து ஆச்சரிய காக்ஷியெய்தினார்க ளென்று நான் சொல்லவும் வேண்டுமோ? இங்ஙனமாகச் சென்றுகொண் டிருந்த ஜோதிமதியானவள் அவ்வூரரசன் அரண்மனையருகில் சென்று கொண்டிருந்தபோழ்து அவ்வரண்மனை யுப்பரிக்கையின் மேலிருந்த சூரசேனனுடைய சனிஷ்டகுமாரத்திபுஷ்பகாந்தியென்பவள் குதிரை மீதேறிவரும் ஜோதிமதியைக் கண்டுமோகித்து ஆ. திடீரென்று என்னை மோகசாகரத்தில் மூழ்குவித்தவென்னின்பப் பெருக்கே! நீயே எனக்கு கணவனன்றி மற்றொருவரை மறந்தும் என் சித்தத்திலெண்ணேன். நீ எங்கே செல்கிறாய்? இப்போதே என் தந்தையிடஞ் சென்று சொல்லி உன்னையழைத்து வந்து என்னை மருவும் மணாளனாக்கிக் கொள்கிறேன். என் தந்தை 'யான் இச்சிக்கும் புருஷனையன்றோ மணாளனாக்குவதாக வாக்களித் திருக்கின்றாரெனச் சொல்லிக்கொண்டே, மெத்தையை விட்டுக் கீழிறங்கி தனதந்தரங்கத் தோழியையழைத்துக் கொண்டு அரசனிருக்கும் மண்டபம் சேர்ந்து, தன் தந்தைக்கு சமீபமாய் தன் அந்தரங்கத்தைத் தெரியப்படுத்தினள். அவ்விதமொழியைக் கேட்ட அரசன் வீதியில் சென்ற அரசகுமாரனை யழைத்து வரும்படி சேவகர்கட் குத்தரவளிக்க அங்ஙனமே சேவகர்கள் அரசகுமாரன்போன்ற ஜோதிமதியை யழைத்து அரசன் முன்வர உடனே சூரசேனன் ஜோதிமதியின் முகவசீகரத்தையும் வாய்ச்சாதுர்யத்தையும் கண்டுமன மகிழ்ந்து இச்சுந்தர புருஷன் நமது குமாரத்தியாகிய புஷ்பகாந்திக்குத் தகுந்த கணவனே யெனவெண்ணி ஓர் கடிதமொன்றை வரைந்து ஜோதிமதியாகிய அரசகுமாரனிடத்தில் கொடுத்தனன். அங்ஙனம் ஜோதிமதியானவள் ஓ! அரசனே தங்கள் கடிதத்தில் மிக்க அழகுள்ள தங்கள் குமாரத்தி புஷ்பகாந்தியை மணம்புரிய வேணுமென்று எழுதியிருக்கிறீர். ஆனதால் அவ்வித உடன்பாட்டுக் கிணங்கி மணம்புரிவதானால் ஆறுமாதம் சென்றபின்தான் ஸ்திரிகளிடத்தில் சேருவதென என் கோரிக்கை என்றாள். உடனே அரசன் புத்திரியை வினவ, அவளுமவ்வித வுடன்பாட்டுக் கிணங்கியதாய் சூரசேன வரசன்

மகிழ்ந்து முகூர்த்த நாளொன்று கணித்து நல்ல சுபவோரையில்
சகலாடம் பரத்துடன் ஜோதிமதிக்கும் புஷ்பகாந்திக்கும் சுப
முகூர்த்தம் நிறைவேறியது. ஜோதிமதியானவள் மாமனார் வீட்டி
லேயே யிருந்தாள்.

ஸ்திரிகளுக்குச் செல்வமும் சிறப்பும் பெருமையும் பிறவும்
தங்கணவரே யாவர். கொழுநனில்லாமற் றெல்லாச் செல்வமும்
குறைவின்றி யிருத்தலாற் பயனென்னை? நாடோறும் ஜோதிமதி
சயன அறைக்குட் சென்றவுடனே தன்புருஷனைத் தான் சீக்கிர
மடைந்து சுகிப்பிக்கச் செய்யவேண்டு மென்று கடவுளைப் பிரார்
த்திப்பள். இன்னவளிப்படி காலத்தைக்கழித்து வருகையில் சூர
சேனன் சின்னாள் தேககுணமின்றி காலவியோக மானான். அவ்வர
சனுக்குப் புத்திரசந்தான மின்மையால் ஜோதிமதியாகிய மருமக
னுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்தனர். இவ்வாறு சின்னாள்
சென்றபின்னர் ஜோதிமதியானவள் தன் நந்தவனத் திடையே
சென்று ஆங்குள்ள பக்ஷிசாதிகள் இனிய குரலோசையுடன் பா
டும் இனிமையும் ஆங்குபுஷ்பித் திருக்கும் நறுமண மலரும் கண்டு
சென்றாள். அங்ஙனம் ஓர்மணிகாக்கை கூவியது அதனைக்கேட்ட
ஜோதிமதியானவள் அவ்வனத்தைச் சுற்றிவருங்கால் ஓரிடத்தில்
பாலியசன்யாசி போன்ற ஒருவனிருக்கக் கண்டாள். அன்னவன்
வாயினிடமாக சோதிசோதி யென மும்முறை கூறினான். அதனைக்
கேட்ட ஜோதிமதி திடுக்குற்று அவள் அறியாது கண்களில் நீர்
பெருகியோடியது. பின்னர் இவள் அவன் அருகிற் சென்று உற்று
நோக்கி தன்கணவனெனத் தெரிந்து ஒருவர்க்கொருவர் துக்கித்து
ஜோதிமதி தான்பட்ட கஷ்டநிஷ்டூரங்களெல்லாம் தன் கணவ
னுக் கெடுத்தோதி யிருவரும் துக்கரங்கிரந்தராய் சஞ்சலித்து
பின்னர் ஜோதிமதி தான் புஷ்பகாந்தியை மணம்புரிந்த விபரத்
தை விபர விபரமாய்ப் புகன்று தன்கணவனை யந்தப்புரத்திற்
கழைத்துச்சென்று சன்யாசி வேடத்தை மாற்றி ஸ்தானபான
உண்டி முதலியவைகளால் அரசகுமாரனைத் தேற்றிய பின்னர்
தன் ஆணுருவை மாற்றி முன்னிருந்த பெண்வடிவோடு துலங்கி
னாள். பின்னர் புஷ்பகாந்தி இன்னவரும் இவ்விஸ்திரியு மாரோ
வென்றையுற்று நோக்குங்கால் அன்னவளருகில் ஜோதிமதி சென்
று நங்காய் இன்னவர்தான் நம்மிருவருக்கும் இன்பமணாள னென்

று ஆதியோடந்தமாய்ப் புகன்று அவ்விருவரும் தங்கணவனுக்கு வேண்டிய பணிவிடை செய்திருந்தனர். இவ்வாறுசின்னாள் சென்றபின் அரசகுமாரன் தன் தாய் தந்தை மற்றுமுள்ள யாவருக்கும் தன் நண்பனாகிய விலோசனனுக்குத்தானிருக்கும் நகரத்தைத் தெரிவித்து அன்னவர்கள் யாவரும் வந்து சேர்ந்தவுடன் தான் அடைந்த ஆபத்தையெல்லா மன்னவர்களுக்கெடுத்தோதிய பின்னர் அவர்களறிய அக்கன்னிகை இரண்டுபெயரையும் மணம்புரிந்துகொண்டு சின்னாள்பொறுத்து அப்பட்டணத்தைத் தனது உயிர்த்தோழனான விலோசனனுக்கு முடிசூட்டி மகிழ்ச்செய்து தன் தாய் தந்தையருடன் அந்நகரைவிட்டுப் புறப்பட்டுத் தன் சொந்ததேசமாகிய சுவேதநகர் அரண்மனை சேர்ந்து தனதிரு பத்தினிகளுடன் காமக்கடல் மூழ்கினவனாய்த் தன் தந்தைக்குப் பின் அவ்வராசாக்ஷியை முடிசூட்டி மங்களகரமாய்ச் சுகத்துடன் செங்கோல் செலுத்தினான். கமலாவதி, ஆதலால் என் இன்பமனாளரே இக்கதையால் ஸ்திரிகளுக்கு கணவன் இல்லமே சதமன்றி தாய் தந்தை சதமல்ல ஆகலின் இனிநமது சொந்த தேசம்போவதே உசிதமென அவ்விருவர்களும் பேசியபின்னர் ஓர் நாள் கமலாவதியும் நம் சிங்காரலோசனனும் அரசனாகிய கலாவல்லவனிடத்தில் விடைபெற்று தங்கள் நகரமாகிய ரத்தினபுரியை நோக்கி விரைந்து சென்றார்கள். சிங்காரலோசன் தனது மூத்தமனைவியாகிய சித்ரரேகையைப் பிரிந்துநெடுநாட்களானதால் அன்னவனைக் காண்பான் பொருட்டு விரைந்து ஆவலோடு சென்றான்.

இன்னும் வரும்.

விவசாயம்.

சென்னை இராஜதானியின் அநேக இடங்களில் பயிரிடும் குடிகள் தங்களுடைய நஞ்சை நிலங்களை எருவிடுவதற்காக பச்சை இலைகளையும் சேகரித்து கட்டை வண்டி, ரெயில்வண்டி மூலமாய் அதிக பணம் சிலவு செய்து கொண்டு போகிறார்கள், இவ்விதமாய் அதிகபணம் செலவுசெய் கொண்டு போகிறது. அதாவது பச்சை எருவை நஞ்சை நிலங்களிலேயே பயிரிடுவது. அப்படி பயிரிடுவதால் எருவை நிலங்களுக்கு கொண்டுபோவதற்கு வேண்டிய செலவு மீந்துவிடும்.

இலவம்பஞ்சிற்றுயில்.

இலவம் பஞ்சுமெத்தையில் நீ நித்திரை செய்.

இது - வாதசீதப் பிணிக ளணுகாமையைச் செய்தலானும் துன்மையறிவை மிக்க விளைத்தலானும் - துயிலுதற் குரிய தேய மெனக் கூறியது.

50-ம்-அதி-இடனறிதல்-3-ம்-செய்யுள்.

ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின்.

ஆற்றாரும்-வலிமையில்லாதவரும், ஆற்றி-வலிமை யுடையவ ராய், அடுப-வெல்வார், இடன்- (அதற்கேற்ற) இடத்தை, அறிந்து-தெரிந்து, போற்றி தம்மை காத்துக்கொண்டு, போற்றார்கண் தம்மை நொய்யச் செய்யும் விரோதியி னிடத்து, செயின் தக்க தொழிலைச் செய்வாராயின் என்பதனாற் காண்க.

வஞ்சகம் பேசேல்.

வஞ்சனையாகிய சொற்களை எப்போதும் பேசாதே

28-ம்-அதி-கூடாவொழுக்கம் முதலாம் செய்யுள்

வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைஞ்சு மகத்தே நகும்.

காமம் தன்னுள்ளே தோன்றி வருத்த அதனைப்புறத்திலே காட்டாமன் மறைத்து நடப்பவனது திருட்டு நடத்தையைக் கண்டு உடம்பா யவனோடு கலந்து நிற்கின்ற பஞ்ச பூதங்களுந் தம்முள்ளே சிரிக்கு மென்பதாம்.

அழகலாதன சேயேல்.

அழகல்லாத காரியங்களைச் செய்யாதே.

66-ம்-அதி-வினைத் தூய்மை-4-ம்-செய்யுள்

இடுக்கட் படினுமிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

அசைவற்ற வறிவுடையவர் துன்பம் வந்த காலத்திலு மிகழ் வைத்தருந் தொழில்களைச் செய்யா ரென்பதாம்.

இளமையிற் கல்,

சிறுவயதிலே, வித்தையைக் கற்றுக்கொள்ளு

41-ம்-அதி-கல்லாமை-5-ம்-செய்யுள்

கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வுபடும்.

கல்லாதவர் கற்றவர் முன்னொன்று பேசுமளவிற் பெருமை யிழந்து அவமானமடைவ ரென்பதாம்.

அறனைமறவேல்.

செய்பத்தக்க தருமத்தை, எந்நாளு மறவாதே,

4-ம்-அதி-அறன்வலியுறுத்தல்—2-ம்-செய்யுள்

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூஉங் கில்லை கேடு.

ஒருவனுக்குத் தருமஞ் செய்தலைப் பார்க்கிலு முயர்வைத் தருவதும், அத்தருமத்தைப் பயக்கத் தான் மறந்து விடுதலைப் பார்க்கிலுங் கேட்டைத்தருவதும் இல்லையென்பதாம்.

அனந்தலாடேல்.

நித்திரையை, அதிகமாகச் செய்யாதே.

54-ம்-அதி-பொச்சாவாமை-3-ம்-செய்யுள்

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தொப்பாலு நூலோர்க்குந் துணிபு.

மறதியையுடையவர்க்குக் கீர்த்தியில்லை யென்பது இந்த நூலார்க்குமாத்திரமல்லாமல் மற்றெந்த நூலார்க்கு முடன்பாடாம்—ஆதலால் மறதியாகாதென்பதாம்.

ம து பா ன க் கோ ட ரி.

நேரிசை வெண்பாக்கள்.

கள்ளே மதிகுறைக்குங் கற்றதெல் லாந்துலைக்குங்
கள்ள மனதைக் கவர்ந்திழுக்கும்—பள்ள
நரகக் குழிசேர்க்கும் நட்புடை யோரை
நெருங்கவுஞ் செய்யாது நீக்கு.

மதுவுண்பான் காந்தையும் மக்களுந் தந்தம்
விதிபய னிஃதென விம்ம—சதிசெய்து
மானந் துலைத்து மதிகுறைந்து நாடோறு
மேனம் பலசெய்வா னே.

கள்ளுண்பா னாக்கமுங் கல்வியும் மேன்மையு
முள்ளவ னாயினு மோம்பாது—எள்ளளவும்
நாணமு மச்சமும் நாடா துயர்வழிந்து
பாணிக்கே செய்வான் பணம்.

மதுவே மதியற்று வாழ்க்கையு மற்று
விதியெனது கைச்சிர மேல்வைத்—ததிதுக்க
மாகி வலிமெலிய வாக்கு மிதைச்சற்றே
யூகித்துள் ளத்தே யுணர்.

கள்ளுண்பா னென்றாங் கடைதேறான் மானேகேள்
சொல்லுந் தவர்வான் றுணையற்று—அல்லலுட
னுய்வா னென மூத்தோ ருண்ணு ரிதையறிந்து
செய்வினை செய்தா லறம்.

கள்ளால் மதியற்று கற்றோர் துணையற்று
பள்ள நரகஞ்சேர பாத்திரனாய்—வெள்ளிப்பொன்
வீடும் பொருளற்று வேந்தர் சிறையிட
பாடும் மிக பட்டான் பார்.

ஆசீர் விருத்தங்கள்.

காலையிற் கள்ளை யுண்டு காசுக்கு நட்ட மாகி
சாலவே கந்தை வேடந் தரித்து தற் சனரின் கேண்மை
மேலுக்கு மேலுங் கொண்டு வீண்பணஞ் செலவு செய்து
காயத்தை வியர்த்தஞ் செய்யுங் கசடரை யென்செய் வோமே.

கள்ளாற் பெற்ற பேரைக் கனமுடன் புகலக் கேளுங்
கள்ளைத்தா னுண்ட தாலே கடலுண்ட முனிவ னானான்
தள்ளாடி வழியிற் பாட சபாப்பிர சங்கி யானான்
வள்ளலு மாகிச் செல்வம் மதுவுக்கே செலவு செய்தான்.

தொந்தி நிரம்பக் கள்ளைத் துணையோ டுண்ட பின்னர்
வந்ததை யுளறிக் கொண்டு வழியெலாஞ் சண்டை யிட்டு
அந்தியில் வீட்டுக் கேக ஆகாத் தாலே வீதி
மந்தியிற் றுயின்றோன் தன்னை மரமென வுதைத்தர் யாரும்.

கள்ளையே நாளுந் நம்பி கடன்மிக வாங்கிக் கொண்டு
வள்ளியோன் போல தன்னின் வாடிக்கை கடையுட் சென்று
அள்ளிமிய பணத்தைத் தந்து அலைரமிடா தேனை யுண்டு
கள்ளன்போல் வேளியே வந்த காட்சியை யறிவாய் நெஞ்சே.

கள்ளால் வந்த வாழ்க்கை கண்டுதான் செப்ப வொன்று
தள்ளைபோல் நாலு மெங்கு மலைந்துசீழ் மக்க ளேசந்
கொள்ளைகொண் டன்னை தந்தை குழந்தையில் லாளும் நோவ
புள்ளுவர் சால தூற்ற புண்ணிய மறைந்த தந்தோ.

கொக்காகி கடையுட் சென்று குக்கன்போ லாகிக் கள்ளைப்
பக்குவ மாக வுண்டு பதங்கினன் கள்ள னைப்போ
லக்காலை மந்தி யாகி யறிவிலாக் கத்தை யாகித்
திக்கற்ற பிணமு மாகித் தெருவிலே கிடந்தா னம்மா.

த. தாமஸ்.

பெற்றோரைப்பேணல்.

எண்ணில்பல கோடியுயி ரெத்தனையோ வத்தனைக்குங்,
கண்ணிற் கலந்தவருட் கண்ணே பராபரமே.

எத்தனையோ கோடி யெடுத்தெடுத்துச் சொன்னாலுஞ்,
சித்தமிரங்கிலையென் செய்வேன் பராபரமே.

“அன்னையும்பிதாவு முன்னறிதெய்வம்.” என்று தெய்வப் புலமை ஔவையார் கட்டளையிட்டிருக்கும் பிரமாணத்தை யாவரும் கவனித்து ஒழுகவேண்டுவது அத்தியாவசியம். ஒவ்வொருவனும் தான் சிசுவாகப்பிறந்த காலந்தொட்டு யௌவனபருவம் அடையுமளவும் மாதாபிதாக்களாலேயே முற்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றான். அவர்கள் அக்காலத்தில் தன்னைக்குறை

வறப் பரிபாலிக்காவிடில் அவன் கதி என்னாய் முடியும்? மீன் முதலிய சிறுபிராணிகள் உயிர்பெற்று உலகத்தில் தோன்றிய உடனே தத்தம் மாதாவின் பராமரிப்பு இல்லாவிடில் ஒருக்கால் தமது இயற்கையறிவினால் தமக்குவேண்டிய ஆகார வகைகளைத் தேடிக்கொண்டு ஒருவாறாகப்பிழைத்தல் கூடும். மானிடராகிய நாமோ பிரதமத்தில் மாதாவின் பரிவின் விசேஷத்தினாலேயே வளர்ந்துவர வேண்டியதாயிருக்கிறது. நாம் சிசுக்களாக மாதாவின் கருப்பாசயத்தில் தங்கியிருந்தகாலத்து நம்மைப் பத்துமாதம் வரையில் சுமந்தபோதும் பிறகு நம்மை ஈன்றெடுத்தபோதும், நமக்குப் பிணிமுதலிய வாராமல் தன்னுயிரினும் நம்மை அதிகமேம்பாடாக இரவில் உறக்கமற்றுக் காப்பாற்றி வந்தபோதும் அவள்பட்டபாட்டை அளக்கயார் தரம்? பட்டினத்துப் பிள்ளையாரென்னும் மகா ஞானியார் தாயின் பரிவைப்பற்றி, "ஐயிரண்டு திங்களா யங்கமெல்லா நொந்துபெற்றுப், பையலென்றபோதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு, கைப்புறத்திலேந்திக்கனமுலைதந்தாள்" ,என்றும், "முந்தித்தவமிருந்து முந்நூறு நாட்சுமந்து, அந்திபகலாய்ச்சிவனை யாதரித்துத்-தொந்தி,சரியச் சுமந்து பெற்றதாய்." என்றும், "வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோள்மேலுங், கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து-முட்டச், சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்." என்றும், "நொந்துசுமந்து பெற்று நோவாமலேந்திமுலை, தந்துவளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல், கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந்தாய்." என்றும் பலவாறாக வியந்து கூறியிருக்கின்றனர்.

நமக்கு விதிவிலக்குகளைக் காட்டவல்ல கல்வியைக் கற்பித்தும் உணவு ஆடையாதிகளைப் பலவாறாக மெய்வருந்திச் சேகரித்துக் கொடுத்தும் நம்மைப் பரிவுடன் பாராட்டி வந்த பிதாவும் அன்னையைப்போலவே முதல்தெய்வமாவார். பிதா ஐந்துவகையான ஆசிரியர்களுக்குள் ஒருவராயிருக்கிறாரென்று சாஸ்திரம் முறையிடுகின்றது. மாதாபிதாக்கள் நமக்குப் போதித்துக்கொண்டுவரும் விஷயங்களெல்லாம் நமக்கு நன்மையைத் தரவேண்டுமென்கிற நல்ல எண்ணத்தினாலேதான். விதி விலக்குகளை யுணரவல்ல பகுத்தறிவு நமக்கு வருகிறமட்டும் அவர்கள் சொற்படி

நாம் நிற்கவேண்டும். இது காரணம்பற்றியே "தந்தை சொன் மிக்க மந்திரமில்லை." என்றும், "தாய்சொற்றுறந்தொரு வாசகமில்லை." என்றும் பிரமாணமிருக்கிறது. நமக்குப் பூரணமாகப் பகுத்தறிவும் கல்வியில் அபிவிருத்தியும்உண்டானபிறகும் அவர்களுடைய நற்புத்திபோதகங்களைநாம்அலட்சியம்செய்யலாகாது. ஏனெனில் அவர்களிடத்து நெடுநாளைய அநுபவ விசேஷம் இருக்கின்றது. நாம் பெற்றோரினும் மிக்க கல்வி அபிவிருத்தியையும், விவேக விளக்கத்தையும் கொண்டிருக்கும் காரணத்தினால் அவர்களுடைய நியாயங்கள் நமக்குத் தீமையை விளைக்கத்தக்கனவென்று நாம் அபிப்பிராயப்படுகிற பட்சத்தில் அவர்களுக்கு நாம் சித்த சமாதானத்துடன் உண்மையை விளக்கி அவர்களுடைய அங்கீகாரத்தைப் பெற்று நாம் ஒருகாரியத்தில் பிரவர்த்திக்கவேண்டியது. இந்தமரியாதையைக் காட்டினும் வேறு கைம்மாறு நாம் அவர்களுக்குச் செயற்பாலது யாது? மாதாபிதாக்கள் நம்மிடத்து ஆதிதொடங்கிப் பாராட்டிவந்த பரிவுக்காக ஒருவித கைம்மாறு நாம் அவர்களுக்குச் செய்தல் கூடும்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச், சான்றோனெனக் கேட்டதாய்.

தன்னுடைய புத்திரன் கல்வி அறிவு ஒழுக்கங்களில் மேம்பட்டிருக்கின்றானென்று பலரும் மெச்சிக்கூற அதைக்கேட்ட தாயானவள் அவனைப் பெற்றகாலத்தில் அடைந்த மகிழ்ச்சியினும் அதிக மகிழ்ச்சியை அடைவாள்.

161975

மகன்றந்தைக்காற்று முதவியிவன்றந்தை, யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்.

யாதொரு பிள்ளையானவன் தான் அறிவினாலும் ஒழுக்கத்தினாலும் விசேஷப்பட்டிருத்தலைக்கண்டு இப்படிப்பட்ட அரிய புதல்வனைப் பெறுதற்கு இவன்பிதா என்னதவஞ் செய்தானோ என்று பிறர் சொல்லும்படி நடந்துகொள்ளுவதேதான் தன் தந்தைக்குச் செய்யும் பொருத்த உதவியாகும்.

இவ்விரண்டு குறட்பாக்களில் கூறப்பட்டுள்ளபடி ஒருவன் நடந்துகொண்டு வருவானாகில் அதுவே "தந்தைதாய்ப்பேண்."

என்று ஔவையார் கூறியபடி நடப்பதாகும், "அன்றியும் அது அவர்களுக்கு நாம் செயற்பாலதாகிய பெருத்த கைம்மாறாகும். அவர்கள் விஷயத்தில் செய்ந்நன்றி பாராட்டாதிருத்தல் எவ்வளவும் தருமமன்று ஸ்ரீராமர் தமது தாய்தந்தையரின் கட்டளையை மறுப்பது யுக்தமன்றெனக்கருதி இராச்சியத்தைத் துறந்து வனம்புகுந்ததும், தனது மாதாவாகிய குந்திதேவி அருச்சுனன் மேல் இரண்டாவது கணை தொடுக்க வேண்டாமென்று குறையிரக்க, அதற்கேற்றபடியே கன்னன் தன் குரோதத்தையும் ஒரு பொருளென மதியாது மாதாவின் வாக்கியத்தைப் பரிபாலித்ததும் சிறந்த அறங்களாம். அப்படிப்பட்ட ஒழுக்கங்களைக் கவனித்து நடப்பதே நமது பெருங்கடமையாகும்.

(இஃதோர் முக்கியவேண்டுகோளால் வெளியிட்டாம்.)

பொருளும் பொருளாளிகளும்.

உலகவழக்கில் பொருள் என்றால் பலவித அர்த்தங்களைக் கொள்ளும் பதப்பிரயோகமானாலும், இவ்விடத்துப் பொருள் என்றால் செல்வமென்னுந் திரவியத்தைப்பற்றி யெடுத்தாள்வாம் எல்லாவிதமான பொருள்களினும் அதிமுக்கியமும் மேம்பாடுமுடைத்தன கல்விப்பொருளுஞ் செல்வப்பொருளுமேயாம். இவ்விருவகைத்துள் கல்விப்பொருள் கற்றாரிடத்துற்றதே என்ப. செல்வப்பொருளோ "ஆறிடுமேடு மடுவும்போலாம்" என்பதற் கிணங்க இன்றொருவர் பாலிருந்து பின்னொருக்கால் மற்றொருவர் பாலிருக்கும். அதனால்,

துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டு
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டும் நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும். (என்றார் நமது ஜைனமுனிவர்

இதுமுதலியன தாத்பரியங்களைத் தழுவிய பொருளுக்குச் செல்வம் என்னும் பெயரைப் பொருத்தி யிருக்கும் ஆன்றோர் மொழிக் கிணங்க செல்வம் போவோம் என்பதாகவே சென்றுழன்றுக் கொண்டிருப்பதை யுணர்வார்நல்லோர். அச்செல்வஞ் சிறிதுகாலமேயாம்.எவ்வளவோ 'கஷ்டத்துடன் தனக்குள்

சோச்சேர்க்கும் பொருள் தனக்குயாதும் பிரயோசன மாக்கிக் கொள்ளாதும், உண்ணுதும், உடுக்காதும் சத்விஷயங்களிற் செல விடாதும் பூதங்காப்பெனச் சேர்த்துவைத்து பொருளானது அதீதமான கிருத்தியத்தில் மூன்றுவது பேர்வழிக்கு உபயோகம் குமல்லவா ? எண்ணிப்பார்க்குமளவில் பொருட்செல்வம் பூரியர் பாலுமுள. நண்ணிப்பார்க்கில் சிரியர்பாலுமுள. சிரியராகிய உத்த மரிடத்தும் அதமராகிய பூரியரிடத்தும் இவர்களுக்கிடையே மத் திமரிடத்தும் பொருளிருக்கு மென்பதாம். என்பது கொண்ட அப்பொருளையுடைய மூன்று வகையினர்களையும் பொருளாளிக ளென்றே தொகுப்பாய்க் கூறுவாம். இப்பொருள் வருவதற்கு பல விதங்களுண்டு. மனசாக்ஷிக்கு விரோதமின்றி உண்மையில் கஷ்டார்த்தமாய்க் கிடைத்தபொருள், தனது முன்னோர்கள் தேடிவைத்தபொருள், ஈஸ்வர கிருபையால் ஏதோகுறியாதவண்ணம் அகஸ் மாத்தாய்க் கிடைத்த பொருள், இனத்தாரை வஞ்சித்து அபகரித்த பொருள், கூட்டு தொழிலோ கூட்டு வியாபாரமோ செய்து தன்பங்காளியை வஞ்சித்து அவனைக்கெடுத்து தான் மேன்மையுற அபகரித்தபொருள், திருட்டுத்தனத்தில் சேகரித்தப் பொருள், நயவஞ்சகஞ்செய்து வாங்கியபொருள், ஈஸ்வர பிரார்த் தனையைக்காட்டித் தேடியபொருள், கோவில்கட்டும் கைங்கர்ய மென்று சேர்த்த பொருள், கோவில்தரும கர்த்தனென வந்து அக்கோவில் வரும்படிகளைக் கொள்ளையிட்டு சேர்ந்தபொருள், மடங்கட்டுவதாகச் சேகரித்த பொருள், கைம்பெண்களை விருத்தி யாக்குவதாக மயக்கி, ஏதோ ஓர்காரியம் செய்யப்புகுந்து அவர் களை நட்டத்துட்டுதாம் சேர்த்துக்கொண்ட பொருள், இன்னும் பற்பல விதத்து வந்தபொருள், எனினும் அப்பொருளுக்குப் பொருளென்று பொதுப்படப் பொருந்தும். மேற்சொல்லிய வகைபலவற்றுள் உத்தமமான வழியிற் சேர்த்துள்ளாரை யுத்த மப்பொரு ளாளிக ளென்றும், அதமத்தால் சேர்த்துள்ளாரை அதமப்பொருளாளிக ளென்றும், இரண்டு வகைகளுங்கலந்தா ரை மத்திமப்பொரு ளாளிகளென்றும் கூறுவாம். இவர்களுள் ளும் சிலபிரிவினைகளுண்டு. உத்தமரினுத்தமர், உத்தமரில் மத் திமர், உத்தமரிலதமர்.

உத்தமரினுத்தமர் என்பது சத்விஷயத்தின் உண்மையாக கஷ்டாத்துவிதமாகச் சேகரித்தபொருளை தமது சுயமான உங்

பன வுடுப்பன முதலியவற்றிற்குப்போக உத்தமமான சத்கருமங்களால் பொருளைச்செலவிடுகிறவர்களாம். உத்தமரில் மத்திமர் உத்தமவகையில் தேடியபொருளை விலாப்புடைக்கத் தாமுண்டு மற்றும் விருந்தோம்பாது சத்விஷய விஷயத்தில் செலவிடாது எஞ்சியதைப் பூதங்காப்பப்புதைத்து வைக்கிறவர். உத்தமரில் அதமர் சரியானவிஷயத்தில் சம்பாதித்த பொருளைத்தாங்களும் வகையாகப் பசியாற வுண்ணாது சேகரித்து தீயாருக்குதவச் செய்கிறவர்கள். இவ்வாறே அதமர்களும் உண்டு. அவர்கள் எனிலோ துன்மார்க்க விஷயமாகவும் முன்சொல்லியபல அநீதவருவாயாகவும் பொருள்களைச் சேகரித்தவர்களாம். அவர்களுள்ளும் அதமரிலுத்தமர் அதமரில் மத்தமர் அதமரிலதமர் எனமூன்று பிரிவினர்களுண்டாம். இது மேனாட்டுகலை ஞானிகளின் துணிபு பற்றியது.

அதமரிலுத்தமர்:— தீயவழியால் வந்தபொருளைத் தங்களுடைய சுயசெலவுக்குபயோகப்படுத்தாது சத்கருமங்களுக்குபயோகிக்கிறவர்கள்.

அதமரில் மத்திமர்:— தீயவழியால் வந்தபொருளைத் தாங்களுமுண்டு சற்கருமங்களுக்குமுபயோகப் படுத்துகிறவர்கள்.

அதமரிலதமர்:— தீயவழியால் வந்த பொருள்களைத் தாங்களே உபயோகித்து விலாப்புடைக்கத் தின்று எஞ்சியன வற்றைப் புதைத்து வைப்பவர்களேயாம்.

இத்தகையார் பலரிடத்து மிருக்குஞ் செல்வமான துஞ் செல்லும். ஏதோ பூர்வபுண்ய வசத்தினால் வந்த செல்வத்தைத் தக்கோர் விஷயத்திலும் சத்கருமத்திலும் செலவிட்டு சுகானந்த மடைவதே பொருளாளிகளின் லக்கணமாம். பரோபகாரம் ஜீவகாருண்யம் கற்றோர்பாலன்பு கொண்ட உபகாரம், பாஷாஞானவிருத்தியு பகாரம், இரக்கம் முதலியன கொண்டு உபகாரம் புரியுந்தக்கோர்கள் பெரும்பால ரில்லாவிடில் இக்கொடுங் கலிகாலத்து எச்சீவனும் உய்ஜீவிக்கா தென்பதாம். அதற்கிணங்கவே பொருளைச் சம்பாதித்துப் பூமியில் புதைத்து பூதங்காப்பனைக் காத்து தமிழ்நலம்,குலநலம்: பாராட்டாது வீணேயுழலும் பொருளாளிகளும்,எவ்வளவு வருவாய் வந்தாலும் அவ்வளவும்சேகரத்திலேயே

ஸ்ரீ கரப்பத்தி வாய்ஞானமட்டும் எட்டிய மட்டியில் திட்டமுடன் பேசி பற்றற்றவர்போல் பாசாங்கடித்து உண்மை ஞானங்கண்டவர்போல் ஊராருக்குபதேசித்து துட்டை இழுத்துப்பிடித்து அறையில் மூடிபோடவெதொப்பச் செய்யவேண்டிய காலத்தும் சுபநலம்போல் ஏனையோர் நலங்களையுங் கருதாது தனக்குவந்த வியாதிக்குத்தான் மருந்து சாப்பிடுவது போல் தன்னால் வந்த பிணியாளருக்குயாதும் மருந்தளித்துஞ் சுகப்படுத்தாது கையில் யாதுமில்லையென்று பட்டாங்கடித்து, அன்னவர்கள். துக்கத்தழுந்தி கைப்பொருள் தோற்று மனவருத்தியிருக்குங் காலத்தில் யாதும் உபகாரம் புரியாது பாழுஞ் செல்வத்தை மெய்யென்றுக் கருதியுழலு மாக்களும், அத்தகைய நைந்தமனமுடையாருக்கு மற்றும் வழியில் வரக் கூடிய உபகாரத்தையும் தடுக்கத் துணிந்துட்டிக்கெடுக்கும் பொருளாளிகளும் அவர்கள் பொருளழிகிறது காலத்தில் யாதாகுமோ அது ஈஸ்வரப் பிரதியாகும் என்றறிஞர் கூறுவர். அதன்படியே நமதுராமகிருஷ்ண பரமஹம்ஸதேவரவர்கள் கூறியதிருமொழியாவன:—

பணத்தைக் கொண்டு போஜனத்துக்கு வேண்டிய பதார்த்தங்களை மாத்திரம் வாங்கக் கூடுமேயன்றி சரீரத்துக் காதாரமாகிய இரத்த மாம்ஸங்களையுண்டாக்க முடியாது. ஆகவே பணமே மனிதனுக்குப் பிரதான மெனக்கருதல் கூடாது,

பணத்திலே ஒருவன் பெருமை பாராட்டிக் கொள்ளக் கூடிய அம்சம் ஒன்றுமில்லை. நாம் பணக்காரனா யிருக்கின்றோமெனக் கருதுவையேல், உன்னைவிட பணக்காரராயிருப்போர் இன்னும் எத்தனையோ பேருளார் அவர்களை நோக்க நீ வெறும் பிச்சைக்காரனே யாவாய் இருட்டினவுடன் வெளியேவரும் மின்மினிப் பூச்சிகள் நாமே உலகிற்கு ஒளியளிக்கின்றோம் என்று எண்ணுகின்றன. பிறகு நக்ஷத்ரங்கள் நாம்தான் ப்ரபஞ்சத்துக்கு ப்ரகாசத்தைக் கொடுக்கின்றோம் என்று நினைக்கின்றன. சற்று நேரங்கழித்து சந்திரன் உதயமாகி ஆகாய வீதியில் வந்தவுடனே நக்ஷத்ரங்கள் நாமமிழந்து வ்யஸந முற்றனபோல் காணப்படுகின்றன. அப்பொழுது சந்திரனும் செருக்குற்று தன் வெள்ளொளி

யால்தான் உலகம் தேஜோமயமாகி எங்குபார்க்கினும் அழகிலும் உற்சாகத்திலும் மூழ்கி மந்த ஹாசத்துடன் ஒளிர்கின்றதென்று நினைக்கின்றான். ஆனால் சற்றுநேரத்துக்கெல்லாம் என்ன ஆச்சரியம் இதோ அருணன்தோன்றிக் குணதிசையிலே (கிழக்குதிக்கிலே) பாலசூரியன் உதயமாகப் போவதை முழங்குகின்றான். இப்பொழுது சந்திரன் எங்கே நாம்தாம் பணக்காரர்களென்று கருதுவோர் இத்தகைய ஸாதாரண இயற்கை விநோதங்களை யுற்றுநோக்குவரேல், அவர்கள் அதுமுதல் பிறகு எக்காலமும் தம் செல்வத்தைப்பற்றி பெருமை பாராட்டவே மாட்டார்கள்.

எவனுக்குப் பணம் அடிமையோ அவனே உண்மையான மனிதன் பணத்தை யுபயோகிக்கும் வழியை யறியாதவர் மனிதரென்றழைக்கப் படுவதற்கு அருஹரல்லர்.

தண்ணீரானது பாலத்தின்கீழே தங்கி நில்லாமல் பாய்ந்து செல்வதுபோல், பணமும் அதைச்சேர்த்து வைக்காத முத்தர்களின் கைகளினின்று போய்விடுகின்றது.

இத்தகைய விஷயங்களைப் பார்த்தும் கேட்டும் தன்னைப் போன்று பிறரை எண்ணாதப் பதிதங்களைப்போலல்லாது அவர்கள் நாளும் வண்ணம் சத்விஷயங்களுக்குபகாரம் செய்யும் அநேக தயாள புருஷரும் மற்றுப்பத்திரிகைகளைப் போன்று நமது பத்திரிகையை நிறைவேற்றிவைக்க எண்ணி நம்மை சன்மானிக்கும் பிரபுடகராகிய ஆதரணைக்கர்த்தர்களும் பொருளில்லாதபோதிலும் சமயம் போல் வியாசமெழுதி யனுப்பும் உபகாரிகளும் நீடுவாழ்கவும் அவர்கள் பொருள் மருள்வாய்ப்பட்டு இருளாகாது அருள் வாய்ப்பட்டு தெருளாக வருட்புரிவாராக.

கடிதங்கள்.

கனம் பூலோகவியாசன் பத்திராதிபரவர்கட்கு அதிவிநய நமஸ்காரம். தாங்கள் தயைசெய்து இதனை உமது அரியவியாஸனில் வரையும்படி வெகுவாய்ப் பிரார்த்திக்கின்றனன்.

என்னிருப்பிடம் புதுவை. அநேக ஆண்டுகளாக பவழையம்பதியின்கண் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அர்ச்: மகிமையன்னையின் மகோற்சவத்தைத் தரிசிக்கவேண்டுமென்கிற எண்ணமிருந்தும், நிறைவேறாமல் இவ்வருடம் நானும் சில நண்பரும் புதுவையிலிருந்து பவழையம்பதிக்கேகி—மேற்படி அன்னையினது மஹோற்சவத்தை தரிசிக்க, வந்த அன்பர்கள் திரளாக குழுமியிருந்ததைக் கண்டு மனம் குதூகலமாயிற்று. மேற்படி அன்னையை தரிசித்து திரும்புங்கால்—சில தண்ணீர்ப் பந்தல்களமைத்துள்ளதைக்கண்டோம். அதில் ஒருபந்தலில் விசேடமாக ஜனங்கள் கூடியிருப்பதைக்கண்டு விசாரித்தோம், சென்னை செண்ட் மேரிஸ்காலேஜியில் முத்தமிழ்ப் பண்டிதர் சு. சின்னப்பாவு முதலியார் என்பவர் வெகு சிரத்தையோடு கடந்த 46 வருடமாக 2–3 மைல்தூரமிருந்து ஜலத்தை பீப்பாய் வண்டிகளிலிருந்து கொண்டுவந்து அவ்விடம் வரும் ஜனக்கூட்டங்கள் சமையல் செய்து சாப்பிட உதவிசெய்வதும் தவிர நீர்மோர் கொள்ளு கஞ்சி பொங்கல் காப்பி முதலானதும் பரோபகாரஞ் செய்கின்றாரென கேட்டதும் தவிர நாங்களும் நேரிற்கண்டோம் சற்று நேரம் பொருத்து அவரிடம் பேசவேண்டுமென அவா கொண்டு அவரைக் கண்டு பேசினோம். அவர் வெகு பொருமையாகவும் சந்தோஷமாகவும் சொன்னதாவது அடிமை இக்காரியத்தை 1863 ம்வருடமுதல் நண்பர்களின் பொருளுதவியால் நடத்திவருகின்றேன். இக்காரியத்திற்காக உதவிபுரியும் புண்ணிய சிலரில் சிலர் இவ்வருடம் ஏதோ தங்களின் அசந்தர்ப்பத்தால் அனுப்பவில்லை. யாதுகாரணமோ எனப்புகன்றார். இதுவிஷயத்திற்காக நாங்களும் பிரதிவருடமும் எங்களால் கூடியதை சேர்த்து அனுப்புகிறோமென வாக்களித்து எங்களுடைய விலாசத்தையும் கொடுத்தோம். மேற்படி முதலியாருக்கு இதற்காக உதவி புரியும் புண்ணிய சிலருக்கும் அர்ச மகிமை யன்னையின் திருவருள் பாலிக்குமாறு பிரார்த்திக்கின்றோம்.

புதுவை துரைசாமி நாய்க்கர்.

நீண்ட நாள்முன்னர் யாமும் நேரிற்சென்று பார்த்தபோது இப்புலவர் தண்ணீர்ப்பந்தலின் உண்மையான உபசரிப்பாதிகளைக் கண்டு மகிழ்ந்துளேம். (பத்—ர்)

மரண அறிக்கை.

1909ஸ்ரீ எப்ரல்மீ 21உ புதன்கிழமை மாலை 3-மணிக்கு C. D. காபிரியேல் பிள்ளையவர்கள் அருமை மனைவி ஸ்ரீமதி சித்தேரியம்மாள் தனது 26வது வயதில் கர்ப்பருக்குள் பேரிளைப்பாறுதலையடைய 22உ வியாழக்கிழமை மாலை 4மணிக்குப் பசுமந்தான் உரோமன் கத்தோலிக்கு (எமேலியம்மாள்) கல்லறையில் கல்லடக்கஞ் செய்யப்பட்டது.

மகா மதுரகவிப்புலவர்:

ந. கபாலமூர்த்திபிள்ளை

உ

சிவமயம்.

1909ஸ்ரீ எப்ரல்மீ 12உ திங்கட்கிழமை
பகல் 1-30 மணிக்குத்
தேக வியோகமான வீ, ஆறுமுகம்பிள்ளை யவர்கள்
அறிகுறி வெண்பா.

சீலகமார் பங்குனியிற் கேண்மின்முப் பத்தொன்றுஞ்
சாலவுயர் நாடிங்கள் சப்தமியா— மாலமரும்
அண்ணற் சிவநிழலை ஆறு முகம்பிள்ளை
நண்ணி புவிநீத்த நாள்.

உ

சிவமயம்.

உத்தர கிரியை

1909ஸ்ரீ மார்ச்சுமீ 6ம் தேதி சனிவாரம் பூரணை விரதம் மகாமகப்புண்ணிய காலத்தன்று காலை 10-30மணிக்குச் சிவபதியடைந்த ஸ்ரீமதி பூபதி அம்மாளுக்கு மார்ச்சுமீ 21உ ஆதிவாரம் காலை 8மணிக்குமேல் உ ஆவிஸ் ஸ்டிரீட் மதிராவல் கப்பல் துறை முகத்துக்கடுத்த தோட்டத்தில் உத்தர கிரியை முடி சூட்டல் 31வது கல்வி 37வது எண்ணுள்ள கிரகத்தில் உபசரிப்பு சத்காலக்ஷேபம் முதலியன நன்கு நிறைவேறின.

செந்தமிழ்பாநு.

சென்னை பறையர்மகாஜன சபை.

1909ஹு மேமீ 2உ ஞாயிற்றுக்கிழமை மாலை 2-மணிக்கு மேல் பெரியமெட்டில் ஷெ சபையின் கூட்டம் நிறைவேறியது.

அங்ஙனம் கனம். P. பொன்னுசாமிப்பிள்ளையவர்கள் சபையின் விண்ணப்பம் வாசித்தனர். காரியதரிசியாகிய, கனம் D. பென்ஜிமெனவர்கள் கிராமம் தர்மகர்த்தாக்களை சபையார் அழைப்பித்ததைப்பற்றி விபரித்து பேசி கூட்டத்தை ஆரம்பித்தனர்.

சபையின் பிரதிநிதியும் பத்திராதிபருமாகிய கனம் இர. சீனிவாசம்பிள்ளையவர்கள் எழுதிவிடுத்த நிருபத்தைவாசிக்கக்கேட்ட அங்குள்ள நங்குலத்தவர்கள் யாவரும் மனோவுற்சாக மடைந்தனர்.

புரசை, கனம் சண்முகம்பிள்ளையவர்கள் சபைப்பயன் ஒற்றுமையைப் பற்றியும், நம்மவர்கள் நடத்தவும் செய்யவும் வேண்டிய சட்டதிட்ட விஷயங்களைப்பற்றியும் தற்காலம் நம்மவர்களெல்லாம் ஒருங்குசேர்ந்து இச்சபையையும் இச்சனபக்ஷபாதனைப் பத்திரிகையையும் ஏற்படுத்தும் பொருட்டு பிரையாசையோடும் கவனிக்கவேண்டிய தவசியமென்று தற்காலக் காருண்ய அரசாங்கத்தாரால் நம்மவர்கட்கு உதவியுங் கிருபையும் மகோசிதா யெண்ணங்களுக்கு ஜனாங்கத்தார் கவனித்தும் அதுவிஷயத்தில் செய்ய சபையோர்கள் உள்ளன்போடு ஒவ்வொருவரும் அடிக்கடி நம்முடைய ஞாபகத்தில் தூண்டி இச்சபை சீர்திருத்தமும்விவேகவாஞ்சையும் இக்காலமக்களுக்கும், இனிவருமக்களுக்கும் நன்மையேதருவ தவசியமென்றும் வெகுவிமரிசை யாகவும் வித்தைசாதுரியமாகவும் உபந்நியாசித்தார். கனம் சுபேதார், மாரிமுத்தாப்பிள்ளை யவர்கள் விஜயப்பத்திரிகை மூலியமாக பிரசுரித்திருந்த பஞ்சமர் விஷயத்தைப்பற்றி வாசித்தனர்.

கல்வியிற்சிறந்த காளையாம் கனம் T. R. P. தீனதயாளம்பிள்ளை யவர்கள் மைசூர் ஆங்கிலேயப் பத்திரிகையி லிருந்ததை திராவிடபாஷையில் விளக்கொளியாய் சங்கத்தின் முன் நின்று வாசிததனர்.

பர்மாப் பதியின் சபை ஸ்தாபக ரெழுந்து பொதுநலமாக நம்மவர்கள் சிதறுவண்ணம் சபைக்கு எதிர்முகமாக நின்று கனம் மி. மதுரநாயகம்பிள்ளை யவர்கள், நங்குலத்தவர்கட்கு இச்சபை என்ப தென்னவென்று சபையால் அடையும் விர்த்திலாபம் யாதொன்றும் நம்மவர்களோடு ஒற்றுமையாகக் கலந்து விவேகவாயலாக ஆராய்ச்சியும் ஆலோசனையுஞ் செய்து கவனிப்

பது கற்றோர்க்கும் மற்றோர்க்கும் அழகாம். மேற்படி சபையால் அனந்தகாரியம் நம்மவர்கட்கு அநுகூலமாகு மென்பதுஉண்மையேயாம். என்றும் இன்றும் நன்றே விளக்கும். அப்படியே இச்சபையைக்கொண்டு முந்தி நடத்திய விஷயங்கள்யாவும் நமக்கு நாமே சிந்தித்துப்பார்க்க வேண்டிய தவசியமே இனிநாம் சபைவிர்த்திக்கு வரவேண்டிய முயற்சியும் துணிபுங்கருத்துங்கொண்டு சடபசோர்வடையாமல் மலையைக்குடையாக பிடித்து தாங்கின வண்ணம் இச்சபையை இக்காலமும், எக்காலமும், தாங்கிநிற்பது நமது குலாபிமானிகட்குப்பெருமையைப்பயக்கும் இங்ஙனம் குலாபிமான விஷயத்தை பேசும் மஹாஜனுகூல மகான்கள் இவ்விஷயத்திற்கு ஏற்ற திரத்தை பூஷணமாகப் பூண்டு கண்ணுண்மணிபோல் உண்மையே துவஜமாக கரத்திற்பற்றி நமது குலவிர்த்தி யபிமான நன்மைக்கே உழைக்கும் நமது ஜனாங்கப் பிரதிநிதியும் பத்திராதிபரு மாகிய கனம் ம-ா-ா-ஸ்ரீ இர-சீனிவாசம்பிள்ளையவர்கட்கு நன்றியறிதலான நமஸ்காரஞ் செலுத்துவோம். கனம் D. பென்ஜிமெனவர்கள் கிராமம் தர்மகர்த்தாள் சபைக்குசெய்ய வேண்டிய உதவிசகாயத்தைப்பற்றி பேசிமுடித்தார். கனம் P. பொன்னுசாமிப்பிள்ளை யவர்கள் அன்போடு புட்ப தாம்பூல உபசரணை செய்தார்.

தக்கலேழை சாஸ்வதன்

கடந்த மாதப்பத்திரிகையின் 87 ஆவதுபக்கத்தில்உண்மை ஞானப்பறையன் என்று கைச்சாத்திட்ட

அன்பருக்கு வந்தனம்,

ஐயா!

சென்னைப் பறையர் மகாஜன சபையின் மீதும், அதன்புராதின நிர்வாகியாகும் ஸ்ரீ இர: ஸ்ரீநிவாசம்பிள்ளை யவர்கள் பொருட்டும் பரிவும் நன்னோக்கமும் விருத்தியாபி விருத்தியும் காட்டி சிலநயவஞ்சக சண்டாளரைக்குறிக்காதும் கூறிஎழுதியவுமது கடிதங் கண்டோமெனினும், தற்போதுமக்கு அச்சபைமீதும், களாச செடியில் நுழைந்துக்கொண்ட தொப்பும் பத்திரிகையின்பேர் மீதும், பொருத்திய பெயர்பொருட்டுமது சம்மதத்தை எப்பத்திரிகையின்வாயிலாக வேனுமெடுத்துரைக்கப்பிரார்த்திக்கின்றனன்.

தேசிகன்.